4. கவன ஈர்ப்பு.

(1) செங்கை மாவட்டத்தின் உணவுப் பொருள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும், அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப் பட்டதும். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"செங்கை மாவட்டத்தின் உணவுப் பொருள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும், அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப்பட்டதும், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவையின் முன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-10)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே. செங்கை மாவட்டத்திலே நடைபெற்றிருக்கின்ற இந்த நிகழ்ச்சியைப் போல பல்வேறு நிகழ்ச்சிகள், பல்வேறு இடங்களில் இதே போன்ற சூழ்நிலைகளில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன. இந்த அனுபவத்தின் அடிப்படையிலே இது போன்ற நிகழ்ச்சிகள் மேலும் நடைபெறாமல் தடுக்கக் கூடிய அளவிற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து 25 ஆயிரம் ரூபாய் பிணை வைப்புத் தொகையாகவும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு வாலாஜாபாத் நகரில் உள்ள இந்தியன் வங்கியிடமிருந்து 20—12—1979-ல் மூன்றாண்டுகளுக்குப் பொறுப்பு நிதியாகவும் நுகர்பொருள் வாணிபக் கழகம் பெற்றுள்ளது. இந்தத் தொகைக்கு அதிகமாக அவர்கள் நெல்லை சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து பெற முடிந்திருக்கிறது. அதை எப்படி இந்தத் துறை அனுமதித்தது? இந்த ஊழல் நடைபெறுவதற்கு அதுவே ஆரம்ப காரணமாக இருந்திருக்கிறது. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

@ 479-482 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செங்கை மாவட்டத்தின் உணவுப்பொள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும்; அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப்பட்டதும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்

1981 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே, நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றிய முழு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 176.774 டன் இருப்பு இருக்க வேண்டிய நெல் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டு குற்றச்சாட்டாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார், யார் என்று கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட குறைபாடுகள் மீது நுகர் பொருள் வாணிபக் கழகம் தனது சட்ட ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து, குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்குமாறு வாலாஜாபாத் சப்-இன்ஸ்பெக்டரிடம் மண்டல மேலாளர் மூலம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர மூவர் மீதும் உரிமை இயல் வழக்கு தொடருமாறும் சட்ட ஆலோசகர் அறிவுரை கூறியுள்ளார். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும் இரட்டைப் பூட்டு முறையில் உள்ள கிட்டங்கி என்பதால், அதனுடைய ஒரு சாவி அவர்களிடத்திலே இருக்கும், மற்றொரு சாவி நம்மாலே நியமிக்கப்படும் அரசு அதிகாரியிடத்திலே இருக்கும். இந்த இரண்டு பேர்களுடைய கவனம் இல்லாமல் நெல் வெளியே போக நியாயம் இல்லை. ஆகவே, அங்கே பணியாற்றிய இரண்டு பேரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கண்ட விசாரணையில் அவர்கள் உடந்தை என்று தெரியவந்தால், அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மண்டல மேலாளர் அடிக்கடி ஒவ்வொரு கிடங்கையும் மேற்பார்வையிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று, வேறு எங்கேயாவது நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி முழுமையாக நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. இப்படிப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதிலே அரசு உறுதியாக இருக்கிறது. ஆகவே, இன்னும் தீவிரமான முறையிலே கண்காணிக்க வேண்டும் என்று சுற்றாணை அனுப்பப்பட்டிருக்கிறது.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோவிலூர் அருகே உள்ள அரகண்டநல்லூரில் ஏறத்தாழ இதே சூழ்நிலையில் நடைபெற்ற ஊழலைக் கண்டுபிடித்தனர். ஆனால் அடிமட்டத்திலே இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர், டெப்டி தாசில்தார் ஆகியவர்கள் மட்டுமே

சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள். அது அந்த அளவோடே முடிந்துவிட்டது. அந்த ஊழல் தொடர்பான ஆவணங்கள் இன்றைக்கு சம்பந்தப்பட்ட துறைகளிடத்திலேயிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், அனைவரும் தப்பிக்கின்ற நிலை இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே இது போன்று பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்பொழுது நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சியும் ஏறத்தாழ அதே போல நடைபெற்றிருக்கிறது. ஆகவே பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்துவிட்டு, அல்லது திருடிவிட்டு அப்படிச் செய்தவர்கள் தப்பித்துக்கொள்ளக் கூடிய நிலையையும், சில சாதாரண அதிகாரிகள் பலியாகக் கூடிய நிலையையும் தவிர்க்கும் வகையில் இந்த ஆவணங்களைக் காக்க முறையாக நடவடிக்கை எடுக்க, உத்திரவாதம் தர அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்துக்கள் உள்ளத்திலே கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே என்னென்ன குறைபாடுகள் உள்ளன என்று நாம் உணர்ந்தோமோ அவை மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. இப்போது அவர்கள் 176,774 டன் நெல்லையும் மூன்று மாதங்களுக்குள் தந்து விடுகிறோம் என்று ஒப்பந்தத்திற்கு வருகிறார்கள். அவர்கள் செய்தது தவறு தான், அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும், அவர்கள் கொடுக்கிறேன் என்று சொல்லுவதை வாங்கிக்கொண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வர வேண்டாம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். செய்தது தவறு என்ற காரணத்தால், இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் செய்யாமலிருக்க, அவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும், மூன்று மாதங்களுக்குள் தருகிறேன் என்று சொல்லுவதால் அவர்களை விட்டுவிடக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தீவிரமான நடவடிக்கையில் அரசு ஈடுபடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.